

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

2022

செயலாற்றுகை அறிக்கை

811/A,ஜயந்திபுர மாவத்தை, பத்தரமுல்லை

உள்ளடக்கம்

அத்தியாயம் 01

நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு

1.1	அறிமுகம்	4
1.2	நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்	5
1.3	பிரதான பணிகள்	6
1.4	நிறுவக விளக்கப்படம்	10
1.5	திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற பிரதான பிரிவுகள் மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்பு பிராந்திய அலுவலகங்கள்	10
1.6	திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற நிதியங்கள்	11
1.7	வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் விபரம்	11

அத்தியாயம் 02

முன்னேற்றம் மற்றும் தூரநோக்கு

2.1	அபிவிருத்திப் பணிகளின் முன்னேற்றம்	12
2.1.1	திரட்டிய நிதியம் மற்றும் – நிதிசார் முன்னேற்றப் பொழிப்பு	12
2.1.2	திணைக்கள நிதியங்களின் நிதி முன்னேற்றப் பொழிப்பு (வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியம்)	13
2.1.3	சுற்றாடல் முறைமைகளின் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ (ESCAMP) செயற்திட்டத்தின் முன்னேற்றம்	14
2.1.4	பிற நிதியத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள்	15
2.1.5	திரட்டிய நிதியம் மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளின் பௌதீக மேம்பாடு	16
2.2	2022 ஆண்டில் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சிறப்புச் சேவைகள்	20
2.3	திணைக்களத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான இலக்குகள் மற்றும் சவால்கள்	27

அத்தியாயம் 03

வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

3.1	நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று	32
3.2	நிதி நிலைமை பற்றிய கூற்று	33
3.3	காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று	34
3.4	நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்	35
3.5	வருமான சேகரிப்பு செயலாற்றுகை	35
3.6	ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை	35
3.7	நி.பி. 208 பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இத் திணைக்களம்/மாவட்டச் செயலகம்/ மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு	36

3.8 நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடல் செயலாற்றுகை 36

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 36

அத்தியாயம் 04

செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்) 37

அத்தியாயம் 05

வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்து கொள்வதற்கான செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் 38

5.2 வலுவாதார அபிவிருத்தி இலக்குகளின்14, 15 ஆம் அடைவுகள் மற்றும் சவால்கள் 40

அத்தியாயம் 06

மனித வள விபரம்

6.1 பதவியணி முகாமைத்துவம் 41

6.2 பற்றாக்குறையான அல்லது மிகையான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை பாதிக்கும் விதம் 41

6.3 மனித வள அபிவிருத்தி 41

அத்தியாயம் 07

இணக்கப்பாட்டு அறிக்கை 45

அத்தியாயம் 01

நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு

1.1அறிமுகம்

இலங்கையின் சுதேச தாவர விலங்கினங்களை அவற்றின் இயற்கையான வாழிடங்களுடன் பாதுகாத்தல் தேசிய முன்னுரிமைகளிலொன்றாகும். வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் நாட்டின் முழு நில மற்றும் கடல் ஆள்புலத்தின் மீதுள்ள வனசீவராசி வளங்களை பாதுகாப்பதற்கு பொறுப்பான பிரதான அரச நிறுவனமாகும். அது தொடர்பான வனவிலங்கு மற்றும் தாவரங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ், வனசீவராசிகள் ஒதுக்கிட வலையமைப்பை தாபிப்பதற்கும் முகாமை செய்வதற்குமான சட்ட அதிகாரத்தை கொண்டுள்ளது. இது தற்போது 12000 சதுர கி.மீ. மொத்த இடப்பரப்பை விஞ்சியுள்ளது. இது இலங்கையின் நிலப்பரப்பின் 18% ஆகும். இது வரையில் இலங்கையில் 40 தேசிய ஒதுக்கிடங்களும் 68 அபயபூமிகளும் உள்ளடங்களாக 108 வனசீவராசிகள் ஒதுக்கிடங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இந்நாட்டிலுள்ள வனசீவராசிகள் ஒதுக்கிடங்கள் நாடளாவிய ரீதியில் பரந்துபட்டுக் காணப்படுகின்றமை அட்டவணை 1இல் விபரிக்கப்பட்டுள்ளது. வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டமானது வனசீவராசிகள் ஒதுக்கிடப் பிரதேசங்களுக்கு வெளியிலுள்ள வனசீவராசி வளங்களுக்கான சட்ட ரீதியான பாதுகாப்பினை வழங்குகின்றது. வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தைப் பயனுறுதி வாய்ந்த முறையில் நடைமுறைப்படுத்தும் பொறுப்பு வனசீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உயிர்பல்வகைமை வளங்களை அவற்றின் இயற்கையான வாழிடங்களுடன் சேர்த்து பேணுதற்கு மேலதிகமாக வனசீவராசிகள் ஒதுக்கிட வலையமைப்பினை, இந்நாட்டின் விவசாயம் மற்றும் நீர் மின்வலு பிறப்பாக்கத்திற்காக நீரை வழங்குகின்ற நாட்டின் பாரிய நீர்த்தேக்கங்களினதும், நீரேந்துப் பிரதேசங்களினதும் நீண்ட கால பாதுகாப்பிற்கும் உத்தரவாதமளிக்கின்றது. சேனநாயக சமுத்திரம் உட்பட கல்லோயா பள்ளத்தாக்கின் நீர்த்தேக்கங்கள், மகாவலி நீர்த்தேக்கங்கள், மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களில் மகாவலி கங்கையிலிருந்து நீரைப் பெற்றுக் கொள்ளும் நீர்த்தேக்கங்கள், உடவளவை, மவ் ஆற, லுணுகம்வெஹர மற்றும் வெஹெரகல ஆகிய நாட்டின் தென் பகுதியிலுள்ள நீர்த்தேக்கங்கள் என்பன வனசீவராசிகள் ஒதுக்கிடங்களில் அமைந்துள்ளனவாகும்.மேலும் பராக்கிராம சமுத்திரம், கவுடுல்ல, மின்னேரியா, கிரிதலே, பதவிய, கலாவெவ மற்றும் யோத வாவி ஆகிய பிரதான குளங்கள் மற்றும் அவற்றின் நீரேந்து பிரதேசங்கள் வனசீவராசிகள் ஒதுக்கிட பிரதேசங்களாக பாதுகாக்கப்படுகின்றன. இவ்வாறு வனசீவராசிகள் ஒதுக்கிடப் பிரதேசத்தினுள்அமைந்துள்ள விவசாய மற்றும் நீர் மின்வலு பிறப்பாக்கத்திற்காக முக்கியத்துவம் பெறும் 40 இற்கும் அதிகமான நீர்த்தேக்கங்கள் காணப்படுகின்றன.

மேலும் மஹாவலி கங்கை , களனி கங்கை, களு கங்கை, வளவை கங்கை ஆகிய பிரதான கங்கைகளின் உயர் நீரேந்துப் பிரதேசங்களும், ሀ◌ீரீபாத அடவி இயங்கை ஒதுக்கிடம், ஹோட்டன்தென்ன தேசிய பூங்கா போன்றனவும் வனசீவராசி ஒதுக்கிடங்களினுள்ளேயே அமைந்துள்ளன.அவ்வாறே நாட்டின் இயற்கை சுற்றாடலை அண்டியதாக சுற்றுலாத்துறையில் செல்வாக்குச் செலுத்துவது வனசீவராசிகள் ஒதுக்கிடங்களிலுள்ள வனசீவராசிகள் வளங்கள் ஆவதுடன், வனசீவராசிகள் ஒதுக்கிடத்தை அண்டிய சுற்றாடல் சுற்றுலாத் தொழிலினூடாக 2022 ஆண்டில் பெற்றுள்ள வருமானம் ரூபா 1864 மில்லியன் மாத்திரமேயாகும்.

1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

தூரநோக்கு

- தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினருக்காக வனசீவராசி மரபுரிமைகளைப் பேணுதல்.

பணிக்கூற்று

- பங்களிப்புடன்கூடிய முகாமைத்துவத்தினூடாக வனசீவராசிகள் மரபுரிமைகளை பாதுகாப்பதை உறுதிப்படுத்தல்

குறிக்கோள்கள்:

- தேசிய மற்றும் சர்வதேச கொள்கைகளுக்கு பொருத்தமான வகையில் வனசீவராசி வளங்களை பேணுவதற்கு தேசிய மூலோபாயத் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்தல்.
- தனிச்சிறப்புமிக்க விஞ்ஞானரீதியான பெறுமானமுடைய பிரதேசங்கள் அடங்கலாக நாட்டின் அனைத்து இயற்கை சூழற் தொகுதிகளும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் ஒதுக்கிட பிரதேசங்களை பாதுகாத்தலும் காலத்திற்கேற்றவாறும், அரிய வகை வனசீவராசிகளின் சனத்தொகையை பேணிச் செல்லக்கூடியவாறும் எண்ணிக்கை ரீதியாகவும் போதியளவிலும் மேம்படுத்தல் மற்றும் அவற்றிற்கிடையேயான தொடர்புகளை தாபித்தல்
- பொருத்தமான ஆராய்ச்சித் தரவுகள் மற்றும் தகவல்களை அடிப்படையாக கொண்டு ஒதுக்கிட பிரதேசங்களை இனங்காணல், வகைப்படுத்தல், முகாமைப்படுத்தல் மற்றும் அவற்றின் தரத்தினை இற்றைவரைப்படுத்தி அவதானம் செலுத்தல்.
- அருகிவரும் உயிரினங்களைப் பாதுகாப்பதற்கான திட்டங்களை தயாரித்தலும் அவற்றை நடைமுறைப்படுத்தலும்.
- குறிப்பிட்டஒதுக்கிட பிரதேசங்களின் சூற்றாடல் முறைமையினை பாதுகாப்பதுடன், சுற்றாடல் சுற்றுலாத்துறைக்கான சந்தர்ப்பங்களை கையாள்வதற்கான வசதிகளை வழங்குதல்.
- நாட்டினுள் வனசீவராசி வளங்களை சட்டரீதியற்ற முறையில் பயன்படுத்துவதை குறைப்பதற்காக வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளினைநடைமுறைப்படுத்தல்
- இலங்கையின் வனசீவராசி வளங்களின் முகாமைத்துவத்துக்காக இயைபான அறிவியல் ஆராய்ச்சிகளை ஊக்கப்படுத்தல்
- பயிற்சி, ஊக்கமளித்தல், தூண்டுதல்களை வழங்குவதனூடாக வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பணியாட் தொகுதியினரின் ஆற்றல்களை வலுப்படுத்துதல்.
- கல்வி மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சிகளின் ஊடாக பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பாக வழங்கும் பங்களிப்பினை அதிகரிக்கச் செய்தல்.
- ஒதுக்கிடங்கள் மீதான தங்கியிருத்தலைக் குறைப்பதற்காக பேணல் செயற்பாடுகளில் பொதுமக்களின் பங்களிப்பினை ஊக்கப்படுத்தலும் பாதுகாக்கப்பட்ட ஒதுக்கிடங்களை அண்டி வாழ்கின்ற சமுகத்தினரின் சமூக பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதில் அவர்களுக்கு உதவுதலும்

1.3 பிரதான பணிகள்

வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் தொலைநோக்கு மற்றும் பணிநோக்கிற்கமைய தனது செயற்பாடுகளை மேற்கொள்ளுமுகமாக தலைமை அலுவலக மட்டத்தில் எட்டு (08) தொழில்நுட்ப பிரிவுகளும், 12 பிராந்திய வனசீவராசி வலய அலுவலுகங்களும் இயங்குகின்றன. இப் பிரிவுகளின் மூலம் முன்னெடுக்கப்படும் பிரதான பணிகளும் பொறுப்புக்களும் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1.3.1 மிடல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

- ✓ வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கான வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல்
- ✓ விசேட அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு செயற்பாடுகளுக்காக செயற்திட்ட முன்மொழிவுகளைத் தயார்செய்தல்.
- ✓ திணைக்களத்தின் மாதாந்த, காலாண்டு, வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளை தயாரித்தல்
- ✓ திணைக்களத்தின் www.dwc.gov.lkஇணைய தளத்தினை இற்றைவரைப்படுத்திப் பேணல்.
- ✓ வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் நாடு முழுவதிலும் உள்ள வானொலி தொடர்பாடல் முறைமையினை கண்காணித்தலும், தரமுயர்த்தலும் பேணலும்.
- ✓ வனசீவராசிகள் திணைக்களத்தின் நாடளாவிய கணனி வலையமைப்பை முகாமைப்படுத்தல், பேணல் மற்றும் மேம்படுத்தல்.
- ✓ தேசிய பூங்காக்களில் நுழைவுச்சீட்டு விநியோகத்தை கணனிமயப்படுத்தல் தன்னியக்கமாக்கல் மற்றும் GIS அலகினை முகாமைப்படுத்தல்

1.3.2 இயற்கை வள முகாமைத்துவம்

- ✓ ஒதுக்கிட பிரதேசங்களுக்கான முகாமைத்துவத் திட்டங்களை தயாரித்தலும் மீளமைத்தலும்.
- ✓ வள பொருட்பட்டியல்களை தயாரித்தலும் இற்றைப்படுத்தலும்
- ✓ ஒதுக்கிட பிரதேச வலையமைப்பை புலனாய்தலும் ஒதுக்கிடப் பிரதேசங்களை பிரகடனப்படுத்தலும், எல்லைகளை அளவிடலும், குறியிடலும்.
- ✓ வனசீவராசிகள் வாழ்விட முகாமைத்துவம் தொடர்பான கொள்கை வகுத்தலும், தொடர்நடவடிக்கைகளும்.
- ✓ படர்தாவரங்களுக்கான விசேட கட்டுப்படுத்தல்நடவடிக்கைகளை முன்னெடுத்தல்
- ✓ தீப்பட்டிகள் மற்றும் வனசீவராசிகள் வாழ்விடக் கூறுகளை முகாமைப்படுத்தல்
- ✓ சூழல் மாசடைதலைக் கட்டுப்படுத்தல் மற்றும் வனசீவராசி சிறப்பினங்களை பாதுகாத்தலுக்கான திட்டங்களை ஒருங்கிணைத்தலும், கண்காணித்தலும்
- ✓ ஒதுக்கிட பிரதேசங்களில் முன்மொழியப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பான சுற்றாடல் சாத்தியவள ஆய்வினை மேற்கொள்ளல்

1.3.3 சட்ட அமுலாக்கல்

- ✓ வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள்பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குரிய பணிகளை மேற்கொள்வதற்குத் திணைக்களத்தின் வெளிக்கள பணியாட்தொகுதியினருக்கு போதிய ஒத்துழைப்புக்களை வழங்குதல் மற்றும் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய பதிவு செய்தல் மற்றும் அனுமதிப்பத்திர விநியோக பணிகளை மேற்கொள்ளல்.
- ✓ வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள்பாதுகாப்பு கட்டளைச் சட்டத்திற்குரிய திருத்தங்களை மேற்கொள்ளல் மற்றும் அதன் கீழ் விதிக்கப்படும் ஒழுங்குவிகளை தயாரித்தல்.
- ✓ சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்டத்தை அமுலாக்குவது குறித்து ஏனைய அரச நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள்.
- ✓ CITES சமவாயத்தின் கீழ் அனுமதிச்சீட்டுக்களை வழங்குதல்.

1.3.4 யானைகளின் பாதுகாப்பு

- ✓ தேசிய யானைப் பாதுகாப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்தல், காட்டு யானைகள் தொடர்பிலான மொத்த தரவுகளையும் முகாமைப்படுத்தலும், இற்றைப்படுத்துதலும்.
- ✓ யானை நடைபாதைகள் உள்ளடங்கலாக யானைப் பாதுகாப்பு இடப்பரப்பினை தாபித்தல்
- ✓ காட்டு யானையினால் விளைவிக்கப்பட்ட சேதங்களுக்கான இழப்பீடு வழங்கல்
- ✓ குடியிருப்புகளில் யானைகளின் நடமாட்டங்களிற்கு தடையாக மின்வேலிகள், வடலி வேலிகள் மற்றும் வேறு நவீன தீர்வுகள் போன்ற பௌதிக தடைகளை தாபித்தல்
- ✓ யானை முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட பொருட்களையும் உபகரணங்களையும் கொள்வனவு செய்தல்

1.3.5 ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

- ✓ வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்து, நடைமுறைப்படுத்தல் மற்றும் பல்வேறு வெளித்தரப்பினரால் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளுக்கு உரிய ஆலோசனைகளையும் அங்கீகாரத்தினையும் வழங்குதல்
- ✓ வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் கருத்துரங்குகள் தொடர்பாக அலுவலர்களை கலந்துகொள்ளச் செய்தல்.
- ✓ பாடசாலை மாணவர்கள், அரசாங்க அலுவலர்கள் மற்றும் கிராமிய மக்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களையும், கண்காட்சிகளையும் நடாத்துதல்.
- ✓ தேசிய வனசீவராசிகள் பயிற்சி நிலையத்தின் பணிளை கண்காணித்தலும், அவற்றை பேணலும்.
- ✓ திணைக்களத்தின் பிரச்சார மற்றும் ஊடக நிகழ்த்தித் திட்டங்களைத் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல்.

1.3.6 சுற்றுலா சேவை முகாமைத்துவ சுற்றாடல் சுற்றுலா மற்றும் சமுதாயஞ்சார் பரப்புரை

- ✓ சுற்றுலா சேவை திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகளை தயார் செய்தல், புதிய சுற்றுலாப் பொதிகளை அறிமுகம் செய்தல் மற்றும் சுற்றுலாத் துறைச் செயற்பாடுகளைப் பல்வகைப்படுத்தல்
- ✓ சுற்றுலாச் சேவை மற்றும் சுற்றாடல் சுற்றுலா அலுவல்களை சந்தைப்படுத்தலும் ஊக்கப்படுத்தலும்.
- ✓ ஒதுக்கிட பிரதேசங்களின் உள்ளேயும் அவற்றுக்கு வெளியேயும் தகவல் நிலையங்களை நிறுவுதல்.
- ✓ ஒதுக்கிட பிரதேசங்களில் தங்கியிருக்கும் தன்மையைக் குறைப்பதற்காக ஒதுக்கிட பிரதேசங்களின் முகாமைத்துவம் தொடர்பாகஅவர்களது பங்களிப்பைப் பெறுதல்.
- ✓ கல்வி மற்றும் விஸ்தரிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதன் மூலம் பொது மக்கள் மத்தியில் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

1.3.7 வனசீவராசிகள் சுகாதார முகாமைத்துவம்

- ✓ வனவீவராசிகளது சுகாதார நிலைமைகள் மற்றும் நோய் நிலைமைகள் சம்பந்தமாக கண்காணித்தலும், அதற்கான நடவடிக்கைகளை எடுத்தலும்.
- ✓ வனசீவராசிகளது கால்நடை காப்புறுதி சம்பந்தமாக பயனுறுதி வாய்ந்ததும் துரிதமானதுமான பதிலளிப்பு.
- ✓ வனவிலங்குகளுக்கான பிரேத பரிசோதனை நடாத்துதல்.
- ✓ நலன்புரி பற்றிய கண்காணிப்பு, அதன் தரத்தினை மேம்படுத்தல் மற்றும் வன விலங்குகளுக்கும் மனிதனுக்குமிடையேயான மோதலை கட்டுப்படுத்த பங்களிப்புச் செய்தல்.
- ✓ விலங்குகளுக்கான புனர்வாழ்வளிப்பு நிலையங்கள் மற்றும் எத் அத்துரு செவன தொடர்பான முகாமைத்துவம்
- ✓ வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழான நிதி ஏற்பாடுகளுக்கு ஏற்ப தேவையான சான்றிதழ்களை வெளியிடல், தேவையான சந்தர்ப்பங்களில் நீதிமன்ற செயற்பாடுகளுக்கு உதவி புரிதல்.

1.3.8 பொறியியல்

- ✓ ஒதுக்கிடப் பிரதேசங்களில் பௌதீக வசதிகளை மேம்படுத்தல் மற்றும் நிர்மாணிப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
- ✓ ஒதுக்கிடப்பட்ட பிரதேசங்களுக்குள் சூழவுள்ள வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சொந்தமான கட்டடங்கள் மற்றும் நிர்மாணிப்புக்களின் பேணல், வீதி முறைமை பேணல் மற்றும் நிர்மாணித்தல்

1.3.9 மனிதவள அபிவிருத்தி

- ✓ மனிதவள மற்றும் பொது நிர்வாகத் திட்டங்களைத் தயாரித்தல்.
- ✓ பணியாட்தொகுதி ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு, வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- ✓ இடமாற்றங்கள், சேவை நீடிப்புகள், ஓய்வுபெறச் செய்தல்கள், ஓய்வூதியம் மற்றும் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியம் என்பன தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.
- ✓ திணைக்கள அலுவலர்களுக்கான செயலாற்று நடவடிக்க்கள், சம்பள ஏற்றங்களை வழங்குதல்மற்றும் திடீர் விபத்துக்களுக்கான நட்டஈடுகளைச் செலுத்துதல்

- ✓ போக்குவரத்து செயற்பாடுகளைக் கண்காணித்தல்,வெ ளிக்கள கட்டிட நிர்மாணிப்புக்களும் பழுதுபார்த்தல்களும்.

1.3.10 **நிதி**

- ✓ மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
- ✓ திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெறும் கட்டுநிதிகளை பிராந்திய அலுவலகங்களுக்கு வழங்குதலும் மீளளிப்புச் செய்தலும். அனைத்து வருமானங்கள் மற்றும் செலவினங்ளை கணக்கிடல் தொடர்பாக மாதாந்த அறிக்கைகளைத் தயாரித்து அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்புதலும் மாதாந்தக் கணக்கு அறிக்கைகளை கணனியில் அச்சிடப்பட்ட திறைசேரிக் குறிப்புக்களுடன் ஒப்புநோக்குதலும்
- ✓ வருடாந்த செலவினங்கள், வருமானம், வனவிலங்குகள் பாதுகாப்பு நிதியம், அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண பி கணக்கு மற்றும் பொது வைப்புக் கணக்கு என்பவற்றுக்கான கணக்குகளைத் தயாரித்து கணக்காய்வாளர் அதிபதிக்குச் சமர்ப்பித்தல்.
- ✓ தலைமையகத்திலுள்ள அனைத்துவித பெறுகை நடவடிக்கைகள் மற்றும் களஞ்சியசாலை நடவடிக்கைகளை கண்காணித்தலும், நிர்வகித்தலும்.
- ✓ கணக்காய்வாளர் அதிபதியினால் வழங்கப்படும் அனைத்து கணக்காய்வு விசாரணைகள் மற்றும் அரச கணக்குகள் செயற்குழுவின் விசாரணைகள் என்பன தொடர்பாக பதிலளித்தல்.

1.4.நிறுவக விளக்கப்படம்(இணைப்பு 06 ஐ பார்வையிடவும்)

1.5 திணைக்களத்தின் கீழுள்ள பிரதான பிரிவுகள், வனசீவராசிகள் பாதுகாப்பு பிராந்திய அலுவலகங்கள்


பணியாட்தொகுதி

துறை
1694

1956

பிரதான அலுவலகங்கள்
262

வனசீவராசிகள்....



வனவிலங்கு காப்பகங்கள்

ஒதுக்கிட பிரதேச வகை		தபோது பிரகடனப் படுத்தப்பட்டுள்ள எண்ணிக்கை
தேசிய ஒதுக்கிடம்	அதிகூடிய இயற்கை ஒதுக்கிடம்	03
	தேசிய பூங்கா	26
	இயற்கை பூங்கா	09
	வன நுழைவு	01
	யானை முகாமைத்துவ ஒதுக்கிடம்	01
மொத்தம்		40
அபயபூமி		68
முழு மொத்தம்		108

பிரதான பிரிவுகள்

- திட்டமிடல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவு
- இயற்கை வள முகாமைத்துவப் பிரிவு
- சட்ட அமுலாக்கல் பிரிவு
- யானைகள் பாதுகாப்புப் பிரிவு
- ஆராய்ச்சி மற்றும் பயிற்சிப் பிரிவு
- சுற்றுலா சேவை முகாமைத்துவ சுற்றாடல் சுற்றுலா மற்றும் சமுதாயஞ்சார் பரப்புரை பிரிவு
- வனசீவராசிகள் சுகாதார முகாமைத்துவப் பிரிவு
- பொறியியலாளர் பிரிவு
- மனித வள அபிவிருத்திப் பிரிவு
- நிதிப் பிரிவு

துறை

- வலய அலுவலகம் - 13
- வலய கால்நடை மருத்துவ அலகு - 08
- கால்நடை மருத்துவ வைத்தியசாலை - 01
- உடவளவை எத் அத்துரு செவன
- உடவளவை யானை தடுப்பு நிலையம்
- காட்டு யானை கட்டுப்பாட்டு அலகு - 04
- தேசிய பூங்கா தலைமையகம் - 17
- ரந்தெனிகல பயிற்சி நிலையம்
- வனசீவராசிகள் அடவி பாதுபாப்பு அலுவலகம் -74
- வனசீவராசிகள் பீட்டு அலுவலகம் - 85

1.6. திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற நிதியங்கள்

வனசீவராசிகள்பாதுகாப்பு நிதியம் (வ.பா.நி)

வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளின் கீழ் இலங்கையில் வனசீவராசிகளின் பாதுகாப்புக்கு ஆதரவு வழங்கும் நோக்குடன் 1967 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட இந்த நிதியத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு.

1. வனவிலங்குகளை பாதுகாப்பதிலிலும் பேணிக்காத்தலிலும் பொதுமக்களின் பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்துதல்.
2. வனசீவராசிகளுக்கான ஒதுக்கிட பிரதேசங்களைப் பேணல்
3. வனசீவராசிகளை பாதுகாப்பதற்கு வனசீவராசி அலுவலர்களும் பொதுமக்களும் வழங்கிய வியக்கத்தக்க பங்களிப்பினைப் பாராட்டுவதற்காக அவர்களுக்கு வெகுமதிகள் மற்றும் பிற ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குதல்
4. வனசீவராசிகள் குற்றங்களுக்கு எதிராக தகவல் கொடுப்பவருக்கு ஊக்குவிப்புப்படி வழங்குதல்

1.7. வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் விபரம்

சுற்றாடல் முறைமைகளை பேணிப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவ செயற்திட்டம் (ESCAMP)

இலங்கையின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒதுக்கிட பிதேசங்களின் உள்ளேயும் வெளியேயும், தரைப்பகுதி, சமுத்திர மற்றும் ஈரலிப்பு நிலம் என்பவற்றின் சுற்றாடல் முறைமை முகாமைத்துவ செயற்பாட்டினை மேம்படுத்துவது இச் செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

செயற்திட்டத்தின் பெயர்	**சுற்றாடல் முறைமைகளை பேணிப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவ செயற்திட்டம் (ESCAMP)**
பங்களிப்பு முகவராண்மைகள்	உலக வங்கி
செயற்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவினம் (ரூ.மி.)	3,600 (35 அ.டொ.மி.)
செயற்திட்டக் காலப்பகுதி	2017 - 2023.05.31

அத்தியாயம் 02

முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1 அபிவிருத்திப் பணிகளின் முன்னேற்றம் 2022

2.1.1 திரட்டிய நிதியம் மற்றும் – நிதிசார் முன்னேற்றப் பொழிப்பு

செலவு விடய இல.	நிகழ்ச்சித்திட்டம்	ஏற்பாடு (ரூ.மி.)	நிதி முன்னேற்றம்	
			(ரூ.மி.)	%
	மூலதனச் சொத்துக்களின் மேம்பாடு மற்றும் புனரமைப்பு			
284-01-01-2001	கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்களின் திருத்த வேலைகள்	6.30	6.05	96
284-01-01-2002	பொறித்தொகுதிகளின் திருத்த வேலைகள்	2.00	1.94	97
284-01-01-2003	வாகனங்களின் திருத்த வேலைகள்	8.00	7.52	94
	மூலதனச் சொத்துக்களின் கொள்ளல்			
284-01-01-2103	பொறித்தொகுதிகளின் கொள்வனவு	1.50	1.30	87
284-01-01-2105	ஒதுக்கிடப் பிரதேசங்களில் எல்லை குறியிடல்	5.50	4.57	83
284-01-01-2401	மனிதவள அபிவிருத்தி	5.00	4.77	95
284-01-01-2506	ஒதுக்கிடப் பிரதேசங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி	2.00	1.87	93
284-01-01-08-2105	மின்வேலி நிர்மாணிப்பு	97.00	62.07	64
284-01-01-09-2506	ஒதுக்கிடப் பிரதேசங்களின் வாழ்விட வளமாக்கல்	78.70	47.82	61
284-01-01-10-2506	ஒதுக்கிடப் பிரதேசங்களின் வீதி வலையமைப்பினை பராமரித்தல்	19.00	8.52	45
284-01-01-15-2509	வில்பத்து தேசிய பூங்காவைச் சுற்றியுள்ள தாக்கம் செலுத்தும் வலய முகாமைத்துவ செயற்திட்டம் (GIZ)	2.00	1.58	79
	முழு மொத்தம்	**227.00**	**148.00**	**65**

- **2022 உத்தேச விசேட வரவுசெலவுத்திட்டத்தின் நிதி முன்னேற்றம்**

தொ.இல.	நிகழ்ச்சித்திட்டம்	ஏற்பாடு (ரூ.மி.)	நிதி மேம்பாடு	
			(ரூ.மி.)	%
i	மின்வேலி உபகரணங்களின் கொள்வனவு	581.00	498.60	86
ii	விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	5.00	2.71	54
	மொத்தம்	586.00	501.31	86

2.1.2 திணைக்கள நிதியங்களின் நிதி முன்னேற்றப் பொழிப்பு (வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியம்)

செலவு விடய இல.	விடயம்	மதிப்பீடு (ரூ.மி.)	செலவு (ரூ.மி.)	நிதி மேம்பாடு (%)
	மீண்டுவரும் செலவினம்			
3000	தன்னார்வ வழிகாட்டி படி	80.00	71.027	89
3002	பிரயாணச் செலவுகள்	100.00	91.182	91
3003	எரிபொருள்	92.00	76.217	82
3005	ஊக்குவிப்புப் படி (நீதிமன்ற தண்டப் பணம் பெறுகை)	19.00	18.804	99
3006	யானை எரித்தல்	4.00	3.415	85
3007	பொது மக்களுக்கு விலங்குகளால் ஏற்படுகின்ற இழப்பீடுகளுக்கான நட்டஈடு	200.00	195.798	97
3008	யானைவெடி கொள்வனவு	250.00	217.128	87
3009	காட்டு யானை விரட்டலுக்கான செலவு	5.00	5.000	100
3010	விலங்குணவு	150.00	92.37	62
3011	சேவைக் கட்டணம்	51.50	49.701	97
3012	வாகன திருத்துதல்கள்	80.00	57.993	72
3013	மின்சாரம் மற்றும் நீர்	17.00	14.428	85
3014	துப்பாக்கி அனுமதிப்பத்திரம்	0.50	0.353	71
3016	வானொலிச் செய்திகள்	4.80	4.027	84
3017	பங்களாக்களின் துணி துவைத்தலுக்கான செலவு	2.00	1.222	61
3018	சட்டத்தரணிகளுக்கான கட்டணம்	0.30	3.000	100
3019	நாளாவித செலவு	42.00	39.986	94
3021	மருத்துவ வழங்கல்கள்	15.00	10.375	69
3022	தேசிய பூங்காக்களின் அலுவலகச் செலவுகள்	13.00	6.621	51
3023	அலுவலர்களுக்கான வைத்தியசாலை மற்றும் மருத்துவக் கட்டணம்	2.00	-	0
3024	அலுவலர்களது உயிர மற்றும் உடற்காயங்களுக்களுக்கான இழப்பீடு	2.00	0.475	24
3030	சுற்றுலா விடுதி மற்றும் பூங்காக்களைப் பேணல்	30.00	24.573	82
3034	வெளிநாட்டுப் பயிற்சிகள்	30.00	3.29	11
3036	ஊக்குவிப்புப் படி	140.00	123.028	88
3037	சமவாய மாநாடுகள்	10.27	3.361	33
3045	பராமரிப்பு ஊழியர்களது குடில்களுக்கான உபகரணங்கள்	0.09	0.077	86
3046	பராமரிப்பு ஊழியர்களுக்கான உணவப் படி	350.00	46.627	13
3048	பராமரிப்பு அலுவல்களுக்குத் தேவையான உபகரணங்கள்	7.50	3.567	48
3051	கற்கை மற்றும் செயற்திட்டப் பணிகள்	0.03	0.025	83
3055	உள்நாட்டு பயிற்சிகள்	10.00	9.754	98
3056	மாணவ காப்புறுதி	3.00	-	0
	மொத்தம்	**1710.99**	**1173.42**	**68.5**

செலவு விடய இல.	விடயம்	மதிப்பீடு (ரூ.மி.)	செலவு (ரூ.மி.)	நிதி மேம்பாடு (%)
	மூலதனச் செலவினம்			
3015	அருகிவரும் அச்சுறுத்தலுக்குள்ளான வனசீவராசிகளது பாதுகாப்புக்குரிய செலவுகள்	51.00	26.28	52
3020	இயந்திர உபகரணங்கள், மின் உபகரணங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றின் பராமரிப்பு	25.00	22.60	90
3028	பூங்காக்களில் சுற்றுலாப் பயணிகளதும் விலங்குகளதும் வசதிகளை மேம்படுத்தல்	46.50	12.17	26
3029	வாகன/ பொறித்தொகுதி/ படகு கொள்வனவு	38.15	12.39	32
3039	பிரதான அலுவலக பிரிவுகளின் வசதிகளை மேம்படுத்தல்	6.00	1.96	33
3040	சமதாயஞ்சார் பரப்புரை	2.03	1.84	91
3041	சமித்திர சீவராசிகளின் பாதுகாப்பு	0.57	0.27	48
3042	வாழ்விட வளமாக்கல் பணிகள்	58.00	28.66	49
3049	மின்வேலி நிர்மாணித்தல்	161.60	32.26	20
3050	அலுவலக உபகரணங்கள்	12.33	9.54	77
	மொத்தம்	**401.17**	**147.99**	**37**
	முழு மொத்தம்	**2,112.16**	**1,323.85**	**63**

2.1.3 சுற்றாடல் முறைமைகளின் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ (ESCAMP) செயற்திட்டத்தின் முன்னேற்றம்

செயற்பாடுகள்	பிரதான செயற் சுட்டிகள்	பௌதீக மேம்பாடு	நிதிசார் மேம்பாடு ரூ.மி.
தொகுதி 2a- வனசீவராசிகள் ஒதுக்கிட பிரதேசங்களை அண்டிவாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல்.	**உடவளவை தேசிய பூங்காவில்** தேனீ வளர்ப்புச் செயற்திட்டம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் வெற்றிலை பயரிடல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	02	1.10
	கல்லோயா தேசிய பூங்காவின் ரத்துகல 105 ஆதிவாசி குடும்பங்களுக்கான வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தல்	01	0.56
தொகுதி 2b- யானை – மனித நல்லுறவினூடே யானைகளினால் விளைவிக்கப்படும் பாதிப்புக்களை குறைத்தல்.	லுணுகம்வெஹர தேசிய பூங்காவில் பாதை நிர்மாணித்தல்	3.33 கி.மீ.	கொடுப்பனவு பணிகள் முன்னெடுக்கப்படும்
	காட்டுயானைக்களுக்கு GPS கழுத்துப்பட்டி அணிவித்தல்	08	0.75
	லுணுகம்வெஹர தேசிய பூங்காவில் கட்டம் I,II,III ,IV களின் நீர்மூலங்களை திருத்துதல்	100 %	13.63
	லுணுகம்வெஹர தேசிய பூங்காவில் சப்பாத்துப் பாலம் அமைத்தல் (40 கி.மீ. உள்ளக பாதை முறைமைக்குரியதாக)	48	31.57

தொகுதி 3a- வனசீவராசிகள் ஒதுக்கிட பிரதேசங்களின் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம்	திருத்தப்பட்ட (13), நீர் மூலங்கள் (03), வாவிகள் (03) (உடவளவை)	16	9.81
	யால தேசிய பூங்காவின் கட்டம் 1 மற்றும் 11 இன் ஆளணியினர் மற்றும் சுற்றுலா பயணிகள் தொடர்பான நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் நீர்குழாய் பதித்தல் (20 கி.மீ.) மற்றும் நீர் தாங்கி வழங்கல்.	100%	72.51
	வனசீவராசிகளுக்கான மருத்துவமனை நிர்மாணித்தல் (அம்பாறை)	80%	10.03
	வனசீவராசி வைத்தியசாலைகளுக்கு ஆய்வுகூட உபகரணங்களையும், தளபாட உபகரணங்களையும் கொள்வனவு செய்தல்.	75%	7.26
	யால தேசிய பூங்காவின் வனசீவராசி வெளிக்கள உத்தியோகத்தர்களது உத்தியோகபூர்வ விடுதிகளை திருத்துதல்	100%	21.98
தொகுதி 3b – வனசீவராசிகள் பாதுகாப்பு பிரதேசத்தை அண்டியதாக சுற்றுலா வதிகளை மேம்படுத்தல்	யால தேசிய பூங்காவின் படனங்கல சுற்றுலா ஓய்வகம், வாகனத் தரிப்பிடத் தொகுதி, மலசலகூட வசதிகள் மற்றும் நில அலங்காரம்	75%	16.77
தொகுதி 3c— வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் நிறுவக இயலளவு மற்றும் முதலீட்டுத் திறன் விருத்தி	அம்பாறை வனசீவராசி வைத்தியசாலைக்கு தளபாடங்களை கொள்வனவு செய்தல்.	100%	1.36

2.1.4 பிற நிதியத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள்

மொரகஹகந்த – களு கங்கை செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வனசீவராசிகள் பாதுகாப்புப் பணிகள்

களு கங்கை மற்றும் உத்தேச மொரகஹகந்த நீர்த்தேக்கத்தை அண்டியதாக நீரேந்துப் பிரசேதமொன்றை பிரகடனப்படுத்தல் மற்றும் அங்கு மனித செயற்பாடுகளை மட்டுப்படுத்துவது அதன் நோக்கமாவதுடன் அதன் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் இடம்பெறுகின்றன.

- மேலே குறிப்பிடப்பட்ட பிரதேசத்தை அண்டியதாக மனித – வனசீவராசி மோதல்களைத் மட்டுப்படுத்துமுகமாக தடைகளை அமைத்தல்
- மனித – வனசீவராசி மோதல்களைத் மட்டுப்படுத்துமுகமாக செயற்திட்டத்திற்கு உட்படும் பகுதியில் வனசீவராசிகளின் வாழ்விடங்களை வளமாக்கல்.
- செயற்திட்ட பிரதேசத்தை அண்டிய வனசீவராசிகள் ஒதுக்கிட பகுதிகளில் சுற்றாடல் சுற்றுலா தொழிலை மேம்படுத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.

பணிகள்	பிரதான செயலாற்ற சுட்டி	பௌதீக மேம்பாடு	நிதி மேம்பாடு ரூ.மி.
வனசீவராசிகள் ஒதுக்கிட பகுதிகளில் சுற்றாடல் சுற்றுலா தொழிலை மேம்படுத்தல்	**வஸ்கமுவ / சேமாவதி தேசிய பூங்கா** விடுதி மற்றும் மலசலகூட திருத்த வேலைகள்	03	4.46
வனசீவராசிகள் ஒதுக்கிட பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.	**மின்னேரிய தேசிய பூங்கா** பாதை மேம்படுத்தல்	13 கி.மீ.	1.32
	விவரண நிலைய திருத்த வேலை	01	0.77
மனித வனசிவராசிகள் மோதலைக் கட்டுப்படுத்தல்	**மத்திய வனசீவராசிகள் வலயம்** ரங்டம்பே மின்வேலி நிர்மாணிப்பதற்காக மின்வேலிக் கம்பங்களை கொள்வனவு செய்தல்	-	2.61

வில்பத்து தேசிய பூங்கா மற்றும் சுயபாதுகாப்பு முகாமைத்துவ செயற்திட்டம் (GIZ)

2017 ஆண்டில் ஜேர்மனிய அரசாங்கத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட இச் செயற்திட்டத்தின் மூலம் 2022 ஆண்டில் பின்வரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

வில்பத்து தேசிய பூங்காவில் கும்புக்வில ஓய்வுநிலையம் நிர்மாணித்தல், கற்பிட்டி கடல்வாழ் ஊர்வன தொடர்பான அறிவுறுத்தல் பதாகை நிர்மாணித்தல், எளுவங்குளம் நுழைவாயிலில் தொங்கு பாலம் நிர்மாணித்தல், 30 மைல் கம்ப அடவி பாதுகாப்பு அலுவலகம் நிர்மாணித்தல், கலாஓயா 02 கொத்து முகாம் தரை நிர்மாணித்தல், கீழ் ஹேன்தொட்ட மற்றும் பழைய துறைமுக சுற்றுலா விடுதி திறப்பு, லகுகல பெடல் படகு சவாரி ஆரம்பித்தல், கல்லோயா தேசிய பூங்காவில் புதிய இயற்கையான வழியொன்றை ஆரம்பித்தல், ஹிக்கடுவ தேசிய பூங்காவின் நுழைவுச்சீட்டு முறைமையை கணனிமயப்படுத்தல்.

2.1.5 திரட்டிய நிதியம் மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளின் பௌதீக மேம்பாடு

பணிகள்	பிரதான செயலாற்றச் சுட்டி	அலகு	2022 நிறைவு		
			தி.நி.	2022 வ.செ.முன் மொழிவு	ந.அ.நி
யானை – மனிதன் மோதலைகட்டுப்படுத்தல்	நிர்மாணிக்கப்படும் மின்வேலியின் நீளம் (இணைப்பு 02-அட்டவணை2.7)	கி.மீ.	163	-	-
	மின்வேலியைப் பராமரிப்பதற்காக இணைக்கப்பட்டுள்ள சிவில் பாதுகாப்பு அலுவலர்கள்	தொகை	3314	-	-
	காட்டு யானை துரத்தியடித்தல் தொடர்பாக இணைத்துக் கொள்ளப்பட்ட சிவில் பாதுகாப்பு அலுவலர்கள்	தொகை	722	-	-
	மின்வேலி உபகரணங்களின் கொள்வனவு	%	100	86	-
	மின்வேலி பாதுகாப்புக் குடில் நிர்மாணித்தல்	தொகை	-	-	132

	பராமரிக்கப்படும் மின்வேலியின் நீளம்	கி.மீ.	5018	-	-
	கொள்வனவு செய்யப்பட்ட யானை வெடி	தொகை	-	-	1,281,740
ஒதுக்கிடப் பிரதேசங்களில் வாழ்விட வளமாக்கல்	திருத்தப்பட்ட நீர் மூலங்கள் (வாவி மறுசீரமைப்பு, (வாவி மறுசீரமைப்பு, அரன்கமுவ, தெய்யங்கே வாவி, பனாகம்மன, பால இலந்தகஹ வாவி)	தொகை	04	-	01
	அப்புறப்படுத்தப்பட்ட படர்த்தாவர நிலப்பரப்பு	ஹெக்.	30	-	30
	அப்புறப்படுத்தப்பட்ட கீழ்வளரி நிலப்பரப்பு	ஹெக்.	498	-	-
	பாதை இரு மருங்கிலுமுள்ள கீழ் காடுகளை பராமரித்தல்	கி.மீ.	-	-	127.9
	புற்தரை முகாமைத்துவம் (குமன, வில்பத்து)	ஹெக்.	53.83	-	90
	கோடை காலத்தில் வனவிலங்குகளுக்கு நீர் வழங்குதல் (டெல்ப் தீவு)	தொகை	-	-	01
பாதுகாப்புப் பிரதேசங்களில் எல்லைக் குறியிடல்	அனைத்து தேசிய பூங்காக்களுக்கும் எல்லைக் கம்பங்கள் கொள்வனவு செய்தல்	தொகை	1500	-	-
	தாபிக்கப்பட்ட மற்றும் திருத்தப்பட்ட அறிவித்தல் பதாதைகள்	கி.மீ.	147	-	06
	தேசிய பூங்கா அளவையிடல் (உத்தேச கலாவாவி தே.பூ., 72 கி.மீ. சோமாவதி 11.32 கி.மீ.)	தொகை	11.32	-	72
கட்டிடங்களின் நிர்மாணிப்பு மற்றும் திருத்தங்கள்	திருத்தப்பட்ட அலுவலகங்கள் மற்றும் நிர்வாக கட்டிடங்கள்	தொகை	03	-	-
	திருத்தப்பட்டுவரும் நிர்வாக கட்டிடங்கள்	கி.மீ.	-	-	01
	திருத்தப்பட்ட பீட்டு அலுவலகங்கள்	தொகை	-	-	01
	திருத்தப்பட்ட சுற்றுலா பங்களாக்கள்	தொகை	-	-	01
	திருத்தப்பட்ட தன்னார்வ வழிகாட்டிகளுக்கான விடுதிகள்	தொகை	-	-	07
	தாபிக்கப்பட்ட மின்விநியோக முறைமை	தொகை	03	-	01
	கிரித்தல கால்நடை வைத்தியசாலையின் கூரை திருத்த வேலை	%	-	-	100
	ரந்தெனிகல பயிற்சி நிலைய கூரை திருத்த வேலை	%	-	-	100
பாதை வலையமைப்புத் திருத்த வேலை	திருத்தப்பட்ட காதைகளின் தூரம் (வில்பத்து தே.பூ./வராஹேன பஸ்கெம)	கி.மீ.	27.1	-	40
	திருத்தப்பட்ட அலுவலகங்கள் மற்றும் நிர்வாக கட்டிடங்கள்	தொகை	06	-	05
	புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சப்பாத்துப் பாலம்	தொகை	06	-	-
சுற்றுலா சுற்றாடல் பணிகளை மேம்படுத்தல்	திருத்தப்பட்ட சுற்றுலா பங்களாக்கள்	தொகை	-	-	01
	நல்லதண்ணி சிவனொலிபாத பாதையில் துப்புரவாக்கல் வசதிகளை மேபடுத்தல்	%	-	-	100
	வனசீவராசிகள் பாதுகாப்பு பிரதேசங்களில் சுற்றாடல் சுற்றுலா பணிகள் மூலம் பெற்ற வருமானம் (இணைப்பு 03)	ரூ.மி.	1864	-	-
	தேசிய பூங்காக்களை பார்வையிடுவதற்காக வருகை தந்த சுற்றுலாப் பயணிகள் (இணைப்பு 03)	தொகை	1,111,827	-	-
	தன்னார்வ வழிகாட்டிகள்	தொகை			264
ஒதுக்கிட பிரதேசங்க	சிவனொலிபாத பகுதியில் துப்புரவேற்பாட்டு வசதிகளை நிர்மாணித்தல்	தொகை	-	-	04

ளின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி	துப்புரவேற்பாட்டு வசதிகள் மேம்படுத்தப்பட்ட அலுவலகங்கள்	தொகை	01		01
	துப்புரவேற்பாட்டு வசதிகள் மேம்படுத்தப்பட்ட சுற்றுலா பங்களாக்கள் (தலவில், பணிக்கவில, மானவில், லுணுவெவ)	தொகை	-	-	04
	நீர் மூலங்களை மறுசீரமைத்தல் மற்றும் புதிதாக நிர்மாணித்தல் (வில்பத்து, தம்போவ, யால, மாதுருஓயா)	தொகை	05	-	01
	நீர் தாங்கிகளை நிர்மாணித்தல் மற்றும் நீர் விநியோக வசதிகளை வழங்குதல் (தம்பேதலாவ, கெக்கிராவல, ரந்தெனிகல)	தொகை	02	-	01
	குழாய் கிணறு நிர்மாணித்தல்	தொகை	04	-	02
	நீர வடிகட்டி வழங்குதல் (பகமூன, களுந்தேவ பீட்டு அலுவலகம்)	தொகை	02		
	மேம்படுத்தப்பட்ட மின்விநியோக முறைமை (கருவலகஸ்வெவ, ஆனவிழுந்தான், புந்தல, யால, கிணிஹரிய/மஹகனதராவ)	தொகை	04	-	01
சமுத்திர சீவராசிகளைப் பாதுகாத்தல்	தொடந்தூவ ஆமை பாதுகாப்பு நிலையத்தின் கண்டேனர் பெட்டி திருத்தம்	தொகை	-	-	01
	சுற்றுலா நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக கடற்பன்றி மாதிரிகளைத் தயாரித்தல்.	தொகை	-	-	03
வாகனங்களி திருத்துதல்க	திருத்தப்பட்ட வாகனங்கள்	தொகை	23	-	-
வீட்டுத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கொள்வனவு மற்றும் திருத்துதல்	கணனி மற்றும் நிழற்பிரதி இயந்திரங்களின் திருத்தம்	தொகை	09	-	-
	Apple Tab 01 හා Drone Camera 01 உட்பட உதிரிப்பாகங்கள்	தொகை	-	-	01
	வாடகை வீடுகளில் இயங்குகின்ற அலுவலகங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ஆயுத பெட்டகம்	தொகை	-	-	10
	சீசிரீவி கெமரா கொள்வனவு செய்தல்	தொகை	-	-	04
பொறித் தொகுதிகளை கொள்வனவு செய்தல் மற்றும் திருத்துதல்	வளிச்சீராக்கி பொருத்துதல் மற்றும் திருத்தம்	தொகை	07	-	07
	பொறிமுறைகளின் திருத்தம்	தொகை	03	-	-
	தொலைபேசி முறைமையைத் தாபித்தல் மற்றும் மேம்படுத்தல்	தொகை	01		01
	மின்விநியோக முறைமையைத் தாபித்தலுக்கான உபகரணங்களை கொள்வனவு செய்தல் (புந்தல)	%	80	-	-
மனிதவள அபிவிருத்தி	குறுகியகால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	தொகை	13	-	
	வனசீவராசிகளை பதுகாப்பது தொடர்பாக அரச அலுவலர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள்	தொகை	07	-	-
	சுற்றாடல் அலுவல்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் தொடர்பாக திணைக்கள அலுவலர்களுக்கு விழிப்பூட்டல்	வே. தொகை	04	-	
	திணைக்கள அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்ட வனசீவராசிகள் பாதுகாப்பு தொடர்பான ஆய்வுகள்	தொகை	07	-	-
	ஆய்வு முன்னேற்றம் மற்றும் விழிப்பூட்டல்களுக்கு ஏற்றவாறு நடாத்தப்பட்ட	தொகை	08	-	-

	ஆய்வுக் குழுக் கூட்டங்கள்				
சமுதாயஞ் சார் பரப்புரை நிகழ்ச்சித் திட்டங்கள்/பிரச்சார நிகழ்ச்சித் திட்டங்கள்	பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை பேக் மற்றும் உபகரணங்கள் பகிர்ந்தளித்தல்.	தொகை	-	-	02
	கிராமிய மக்களை வலுவூட்டும் செயற்திட்டங்கள் மற்றும் சிரமதானம் (பிம்மல் செயற்திட்டம், தேனீ வளர்ப்புச் செயற்திட்டம், அலங்காரச் செடி நாற்றுமேடை செயற்திட்டம், குறைந்த வருமானம் பெறுவோருக்கு தென்னங்கன்று வழங்குதல்)	தொகை	-	-	11
	உலக ஈரவலய தினம், வனசீவராசிகள் தினக் கொண்டாட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்	தொகை	02	-	-
	பாடசாலை மணவர்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்	தொகை	06	-	-
	காட்டு யானை மனிதன் மோதலை கட்டுப்படுத்தும் கிராமிய மக்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்	தொகை	18	-	-
	மின்வேலி பராமரிப்பு தொடர்பாக சிவில் பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் வனசீவராசி அலுவலர்களுக்கு விழிப்பூட்டல்.	தொகை	03	-	-
	யானை மனிதன் மோதல் மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்பு - ஊடகவியலாளர்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்	தொகை	02	-	-
	வனசீவராசிகள் சஞ்சிகை அச்சிடல்	தொகை	1000	-	-
	ரூபவாஹினி விவரண நிகழ்ச்சித்திட்டம் (ஆனவிழுந்தான் கடொலான மீள்நடுகை	தொகை	01	-	-
வனசீவராசிகள் பாதுகாப்புச் சட்டம்	வனசீவராசி குற்றங்களுக்கு எதிரான நீதிமன்ற நடவடிக்கைகள்	தொகை	-	-	1021
	தாபிக்கப்பட்ட ஆயுத ரெக்	தொகை	-	-	03
ஏனைய வன சீவராசிகளின் பாதுகாப்புப் பணிகள்	வனசீவராசிகளுக்கு சிகிச்சையளிப்பதற்காக Portable DIGITAL – X –ray Machine கொள்வனவு செய்தல்	தொகை	-	-	01
	நினைவிழக்கச் செய்யும் துப்பாக்கிகள் மற்றும் அதற்குரியதான உதிரிப்பாகங்கள்	தொகை	-	-	05
	அதியமுக்க கழுவும் இயந்திரம்	தொகை	-	-	04
	Dan Inject நினைவிழக்கச் செய்யும் துப்பாக்கிகளின் திருத்துதல்கள்	தொகை	-	-	04
	சிகிச்சையளிக்கப்பட்ட யானைகள்	தொகை			412
	சிகிச்கையளிக்கப்பட்ட ஏனைய விலங்குகளின் தொகை	தொகை			4757

2.2 2022 ஆண்டில் திணைக்களத்தின் மூலம் முன்னெடுக்கப்பட்ட சிறப்புச் சேவைகள்

- 2022 பெப்ரவரி மாதம் 02 ஆந் திகதிய உலக ஈரலிப்பு நில தினம், " ஈரலிப்பு நிலங்களை காப்போம். முகாமைப்படுத்துவோம். மீளமைப்போம், ஆதரவு வழங்குவோம்" எனும் தொனிப்பொருளில் வில்பத்து தேசிய பூங்காவில் மற்றும் நீர் எனும் தொனிப்பொருள்படகொண்டாடப்பட்டது
- உலக வனசீவராசிகள் தினம் 2022 மார்ச் 03 ஆந் திகதி ஹோட்டன்தென்ன தேசிய பூங்காவில் நடாத்தப்பட்டது.



உலக வனசீவராசிகள் தினம்

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் ESCAM செயற்திட்டத்தின் முகநூல் மூலம் வெளியிடப்பட்ட நிழற்பட போட்டியின் வெற்றியாளர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் தொடர்பாக நடாத்தப்பட்ட செயலமர்வு

- வனசீவராசி துறைசார் திறனை விருத்தி செய்யும் நோக்குடன் 2022 அக்ரோபர் 30 ஆந் திகதியிலிருந்து நவம்பர் 11 ஆந் திகதி வரை ஐக்கிய இராச்சிய வன பாதுகாப்பு சேவை நிறுவனத்தின் (United State Forest Service) அனுசரணையுடன் நடாத்தப்பட்ட Sri Lanka ranger Teraining Pilot Programme தொடர்பாக வனசீசராசிகள் பதுகாப்புத் திணைக்களத்தின் 15 வெளிக்கள அலுவலர்களைக் கொண்ட குழாம் கலந்துகொண்டது.
- மோதலைக்குறைப்பதற்காக பின்வரும் யானை வெடிகள் கொள்வனவு செய்யப்பட்டு காட்டு யானைகளின் அச்சுறுத்தல் நிலவும் பிரதேசங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.வலய ரீதியாக யானை வெடி விநியோகிக்கப்பட்டமை தொடர்பான விபரம் இணைப்பு 02 இன் 2.8 ஆம் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

யானைவெடி வகை	அளவு	செலவு (ரூ.மி.)
இடிச்சத்த கிளரொலி (பெரியது)	304,990	50.89
இடிச்சத்த கிளரொலி (சிறியது)	585,000	81.44
சமிக்ஞை சுருள்	391,750	84.64
மொத்தம்	1,281,740	216.97

- காட்டு யானை – மனிதன் மோதலைக் குறைப்பதற்கான பிரதேச செயலாளர் மற்றும் கிராமவாசிகள் ஒன்றிணைந்து அதிகமாக மோதல் நிலவுகின்ற கிராம அலுவலர் மட்டத்தில் விழிப்பூட்டல், மின்வேலி நிர்மாணித்தல், கிராமங்களில் காட்டு யானை புகுந்து நிற்கும் இடங்களை இனங்கண்டு அவ் இடங'களைத் துப்புரவு செய்தல், இருள் சூழ்ந்துள்ள இடங்களில் மின்குமிழ்களைப் பொருத்துதல் ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தல்.



காட்டு யானை – மனிதன் மோதலைக் குறைப்பதற்கான

இருள் சூழ்ந்துள்ள இடங்களில் மின்குமிழ்களைப் பொருத்துதல்

மின்வேலி நிர்மாணித்தல். கிராமங்களி காட்டு யானை புகுந்து நிற்கும் இடங்களை இனங்கண்டு துப்புரவாக்குதல்







- 2022 **ஆண்டில்** காட்டு யானை – மனிதன் மரணங்களின் வகைப்படுத்தல்கள், மின்வேலி நிர்மாணிப்பு தொடர்பான தகவல்கள் இணைப்பு 02 மூலம் காட்டப்பட்டுள்ளது.

- நாடு பூராவும் காட்டு யானைகளின் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாவட்டச் செயலகங்கள் வாயிலாக இழப்பீடு வழங்கப்படுவதுடன், 2022 ஆண்டின் டிசம்பர் 31 திகதி வரை செலுத்தப்பட்ட இழப்பீடு பின்வருமாறு.

இழப்பீட்டின் வகை	2022.12.31 திகதியளவில் அறிக்கையிடப்படுள்ள நிகழ்வுகளின்எண்ணிக்கை	2022.12.31 திகதியளவில் இழப்பீடு வழங்கப்பட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை *	2022.12.31 திகதியளவில் அறிக்கையிடப் பட்ட கொடுப்பனவுகள் (ரூ.மி.) *
உயிரிழப்புக்கள்	154	109	90.55
உடற் காயங்கள்	179	179	9.49
சொத்து இழப்புக்கள்	2668	2668	88.16
மொத்தம்	**3001**	**2956**	**188.20**

(மேற்படி இழப்பீட்டுத் தொகையினுள் 2022 ஆண்டில் நிகழ்ந்த பாதிப்புக்களுக்கு மேலதிகமாக 2022 ஆண்டுக்கு முன்னைய ஆண்டுகளில் நிகழ்ந்ததெனினும் 2022 ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பான கொடுப்பனவுகளும் உள்ளடங்குகின்றன.

- வனசீவராசிகள் பாதுகாப்பு வலயமைப்பினுள் குற்றங்களைத் தடுப்பது தொடர்பாக 1021 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வனவிலங்குகள் தாவரங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் சட்டத்தை அமுல்படுத்தல்




வனசீவராசி குற்றங்களை தடுத்தல்

வனவிலங்குகள், தாவரங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு மிக்க தாவரவுண்ணி விலங்கொன்றான புள்ளிமான் ஒன்றின் தோல் கைப்பற்றப்பட்டது.

- திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கையில் காட்டு யானைகளின் DNA பகுப்பாய்வு பற்றிய ஆய்வறிக்கை சர்வதேச ரீதியாக பெரு வரவேற்பிற்குரிய ஆய்வுச் சஞ்சிகையொன்றில் பிரசுரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- கரும் புலியின் DNA பகுப்பாய்வு சிறப்பாக நிறைவடைந்ததுடன் அது தொடர்பான ஆய்வறிக்கை பிரசுரிக்கப்படவுள்ளது.

- திணைக்கள அலுவலர் ஒருத்தரினால் முதன் முறையாக நக்கீல்ஸ் ஒதுக்கிடப் பிரதேசத்தலிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட *"Strobilanthes glandulata" என்றழைக்கப்படும் புதிய சிறப்புத் தாவரம் உலகிற்கு அறமுகங் செய்யப்பட்டது.*
- Wildlanka சர்வதேச ஆராய்ச்சி சஞ்சிகையின் 2022 ஆம் ஆண்டில் 400 பிதிகள் அச்சிடப்பட்டன.



Wildlanka சர்வதேச ஆராய்ச்சி சஞ்சிகை

2022 ஆண்டில் தரச்சிறப்புமிக்க உள்நாட்டு வெளிநாட்டு ஆய்வறிக்கைகள் உள்ளடக்கப்பட்டு சஞ்சிகை வெளியிடப்பட்டது.

- வனவிலங்கு பாதுகாப்பு நிதியத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஆனவிழுந்தான் அபய பூமியில் கடொலான தாவரம் மீள்நடப்பட்டது.



கடொலான மீள்நடுகை

ஆனவிழுந்தான் அபய பூமியில் மண்ணரிப்பிற்குட்பட்ட சுற்றாடல் முறைமையை இற்றைப்படுத்துமுகமாக 500 கடொலான செடிகள் நடப்பட்டமை

- வனசீவராசிகள் பாதுகாப்புத் தொடர்பான ஆற்றல், காலத்திற்கேற்ற நிகழ்வுகள், விவரண நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியன தொடர்பான விஞ்ஞானபூர்வ விடயங்களை உலகுக்கு வழங்குவதை நோக்காக கொண்டு வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் Blue Green Media" YouTube எனும் அலைவரிசை 2021 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அதன் கண்ணி நிகழ்ச்சித்திட்டம் 2021 உலக வனசீவராசிகள் தினத்தை அடிப்படையாக கொண்டு நடாத்தப்படும் அறிவார்ந்த கலந்துரையாடலில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 13 நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக முடிவுறுத்த இயலுமாயிற்று. அந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்ட புத்திஜீவி வளவாளர்களின் அர்ப்பணிப்பு நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக அமைவதற்கு உந்துசக்தியாக அமைந்தது எனலாம். இந்த நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புபடுகின்ற வனசீவராசி நேயர்களின் எண்ணிக்கை அதிகரித்ததனால் அவ் அலைவரிசை மேலும் 04 அலைவரிசைகளை இணைத்துக் கொள்வதனூடாக விரிவடைந்தது.

✓ நீல பசுமை மரபுரிமை (Blue Green Heritage)

வனசீவராசிகள் மற்றும் தாவரங்களைப் பாதுகாக்கும் கட்டளைச் சட்டத்தினால் பேணிப் பாதுகாக்கப்படும் தாவரங்கள் மற்றும் விலங்குகளை நாளைய தினத்திற்காக பாதுகாப்பதை நோக்காக கொண்டு, அவை பற்றிய சுருக்கமான அறிமுகம், வாழ்விடம், பாதுகாப்பு நிலை, சட்டரீதியான நிலை, அச்சுறுத்தல் மற்றும் பாதுகாப்பு என்பன பற்றிய சுருக்கமான வீடியோ நாடாக்கல் தயாரிக்கப்படும். அதற்கிடையே 2022 ஆண்டினுள் பல்வேறு சிறப்புத் தாவரங்கள்(நெலு,பூகட், பினர (நில் பினர/சுது பினர/சிவ்பெதி பினர), கூடலு, மஹசெடயா, மஹ ரத்மல் ஆகியன) தொடர்பான குறு வீடியோ நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரித்து உள்ளடக்கப்பட்டுள்ளன.



✓ **ஹரித அருத (Haritha Arutha)**

வனசீவராசிகள் பாதுகாப்பு தொடர்பாக பல்வேறு விவரக்குறிப்புக்களினூடே நடைமுறைக்கேற்றவாறான தலைப்பில் விரிவுரைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், 2022 ஆண்டில் 03 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

1. Archaeological heritage and paleo - biodiversity in and outside protected Areas
2. நீருக்கடியிலான சமுத்திர உலகை காப்போம்..
3. உயிர் பல்வகைமை பாதுகாப்பு மற்றும் வெளிப் பாதுகாப்புக்களிலிருந்து அதற்கான பங்களிப்பு.



ஹரித அருத மேடை நிகழ்ச்சித்திட்டம்

"நீருக்கடியிலான சமுத்திர உலகை காப்போம்..மேடை நிகழ்ச்சித்திட்டத்தை தயாரத்தல்..

- **நடைமுறை சார்ந்த தொடர்பாடல் (Current Affairs)**

திணைக்களத்தின் நடப்பு நிகழ்வுகள் மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்பு சார்ந்ததாக சர்வதேச ரீதியாக வெளிடப்பட்டுள்ள தினங்களையொட்டிய ஏற்பாடு செய்யப்பட்ட 04 விரிவுரைகள் 2022 ஆண்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1. 2022 மார்ச் 03 – உலக வனசீவராசிகள் தினம் - "சுற்றாடல் முறைமை மீளமைப்பு தொடர்பாக தலைமையகத்தை பாதுகாத்தல்"
2. 2022 மார்ச் 21 உலக வனாந்தரங்கள் தினம் - " வானாந்தர நீடுநிலைத்த உற்பத்தி மற்றும் பயன்பாடு"
3. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் விஞ்ஞான ரதியான ஆய்வு நூல்களை வெளியிடல்.
4. சரும ஆய்வு தொடர்பான மேடை நிகழ்ச்சித்திட்டம்.



நடைமுறை சார்ந்த தொடர்பாடல்மேடை நிகழ்ச்சித்திட்டம்

2022 மார்ச் 03 - உலக வனசீவராசிகள் தினத்தையொட்டியதாக நடாத்தப்பட்ட மேடை நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை வடிவமைத்தல்.

✓ **விவரண நிகழ்ச்சித்திட்டங்கள் (Documentaries)**

தீவினைக்களத்தின் ஒதுக்கிட பிரதேச வலையமைப்பையொட்டிதான சுற்றாடல் பெறுமானங்கள் மற்றும் இயற்கை எழலை என்பவற்றைத் தோற்றுவிக்குமுகமாக தயாரிக்கப்படும் விவரண நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடக்கப்படவுள்ளன



விவரண நிகழ்ச்சித்திட்டங்கள்

புறா தீவு தேசிய பூங்கா மற்றும் சமுத்திர உயிர்பல்வகைமையை அண்டிய விவரண நிகழ்ச்சித்திட்ட த்தை படமெடுத்தல்

- **இலங்கையில் ஈ சைட்ஸ் (e-CITES)இலத்திரனியல் சான்றுப்படுத்தும் முறையைச் செயற்படுத்தல்** .

✓ இலங்கையில் ஈ சைட்ஸ் **(e-CITES)**இலத்திரனியல் சான்றுப்படுத்தும் முறையைச் செயற்படுத்தியதன் ஊடாக வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் CITES மற்றும் FFPOஅனுமதிப்பத்திரங்களுக்காக விண்ணப்பித்தல், விநியோகித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் செயற்பாடானது முற்று முழுதாக தன்னியக்கமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரசுகளிடையே மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தலுக்குட்பட்ட தாவர, விசேட விலங்குகள் சம்பந்தமான வர்த்தகத்தை செயற்திறன்படுத்தல் மற்றும் விசேட விலங்குகளின் சட்டவிரோத வர்த்தகத்தை கட்டுப்படுத்தல் என்பன இச் செயற்திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும்.

✓ அதற்கமைய 2022 ஆண்டில் CITES 98 இறக்குமதி அனுமதிப்பத்திரங்களும் 1169 ஏற்றுமதி அனுமதிப்பத்திரங்களும் 126 FFPO அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. அதனூடாக வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 2,060,500 ஆகும்.

2.3 திணைக்களத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான இலக்குகள் மற்றும் சவால்கள்

	எதிர்கால இலக்குகள்		சவால்கள்
1	**வனவிலங்கு – மனித மோதலைக் கட்டுப்படுத்தல்**	1. தற்போதுள்ள 5,018 கி.மீ மின் வேலிகளை பராமரித்துப் பேணல். 2. புதிதாக 750 கி.மீ. மின்வேலிகளை நிர்மாணித்தல். 3. யானை மனித மோதலைக் கட்டுப்படுத்துமுகமாக ஆய்வுகளை ஒத்திகை பார்த்தல். 4. யானை – மனிதன் மோதல் முகாமைத்துவம் தொடர்பாக கிராமிய மக்களின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கௌவதற்காக குறித்த தரப்புக்களை அறிவுறத்தல் மற்றும் பயிற்சியளித்தல், சிரமதான வேலைகளை முன்னெடுத்தல், வனசீவராசிகள் வலயத்தை அண்டிவாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தல் என்பன தொடர்பாக சமுதாய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.	✓ பாரியபௌதீக மற்றும் மனித வளங்களை அவசியமாதல் மற்றும் திணைக்களத்தில் நிலவுகின்ற மனித வளங்கள் போதாமை மற்று வளங்களின் பற்றாக்குறை ✓ மின்வேலி நிர்மாணிக்கும் போது காணிப் பிரச்சினைகள் ஏற்படல் மற்றும் மக்களின் எதிர்ப்புக்கள் கிளம்புதல் ✓ காணி சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்க்கும் போது அதனுடன் தொடர்புடைய (வன பாதுகாப்புத் திணைக்களம்/ மாவட்டச் செயலகம் போன்ற) நிறுவனங்களிடையே நிலவுகின் பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடல். ✓ மின்வேலிக் கம்பங்களை கொள்வனவு செய்வதற்குள்ள ஒரே நிறுவனம் அரச மரக் கூட்டுத்தாபனம் ஆகையால் அதன் இயலளவிற்கேற்ப ஏற்படுகின்ற தாமதம். ✓ மின்வேலி உபகரணங்களை இறக்குமதி செய்யும் போது குறித்த நிறுவனங்களினால் ஏற்படும் தாமதம். இடையூறுகள். ✓ நாட்டில் நிலவிய மோசமான பொருளாதார பிரச்சினை காரணமாக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டமை மற்றும் அபிவிருத்திப் பணிகள் இடைநடுவே நிறுத்த வேண்டிய ஏற்பட்டமை.

		5. புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட பல்பணி அலுவலர்கள் தொடர்பாக விசேட பயிள்சியளித்து மின்வேலி பராமரிப்பு பணிகளில் ஈடுபடுத்தல்	
2	**ஒதுக்கிட பிரதேசங்களின் வாழ்விட வளமாக்கல்**	1. ஒதுக்கிட பிரதேசங்களிக் 692 ஹெக். வாழ்விடங்கள் வளமாக்கப்பட்டன. 2. 05 நீர் மூலங்கள் திருத்தப்பட்டன.	✓ சந்தை மூலப்பொருள், பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளில் அடிக்கடி மாற்றங்களுக் குட்படுவதனூடாக ஒப்பந்தம் செய்யப்பட்ட விலைமனுக்களை விட அபிவிருத்திப் பணிகளது கிரயம் அதிகரித்தல் மற்றும் வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை 3/2022 அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்படல். ✓ ஒதுக்கிட பிரதேசங்களில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் போது நிலவுகின்ற தூரம் மற்றும் தங்குமிட வசதிகளின்மை காரணமாக பூர்த்தி செய்யப்படும் வேலை வரையறுக்கப்படல்.
3	**வனசீவராசிகள் சுகாதார அலகுகளின் வசதிகளை மேம்படுத்தல்.**	1.பாதிக்கப்படும் வனவிலங்குகளுக்கு சிகிச்சையளிப்பதற்கு வனசீவாசிகள் அலகுகளில் வசதிகளை மேம்படுத்தல். • X கதிர்வீச்சு இயந்திர பயன்பாட்டின் போது தேவைப்படும் பாதுகாப்பு ஆடைகளைக் கொள்வனவு செய்தல். • ஒவ்வொரு கால்நடை வைத்திய அலகுக்கும் சத்திர சிகிச்சை உபரணங்கள் மற்றும் மரண விசாரணை உபகரணங்களை கொள்வனவு செய்தல் • அத்திடிய வனசீவராசிகள் தடுப்பு நிலையத்தின் வசதிகளை மேம்படுத்தல் (Ultra Sound Scanner, Heat Lamp கொள்வனவு செய்தல்)	✓ பெறுகை செயற்பாட்டின் போது எதிர்பார்க்கப்பட்ட தரம் மற்றும் உயர் தர நிலைமையின் நியமங்களுக்கு ஏற்றவாறு உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்களை கொள்வனவு செய்வதிலுள்ள சிரமம் ✓ நாட்டில் நிலவிய மோசமான பொருளாதார பிரச்சினை காரணமாக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டமை மற்றும் அபிவிருத்திப் பணிகள் இடைநடுவே நிறுத்த வேண்டிய ஏற்பட்டமை.
